இவர்களில் புதிதாக விடுதி துவங்கப்பட்டால் 50 பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் 30 மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் விடுதியில் சேர்ந்து பயன் அடையலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த விகிதாச்சாரம் முறை மிகவும் குறைவாக இருப்பதால் விடுதிகள் திறக்க வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 521, மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க இப்போது எடுத்துக்கொள்ளப்படுகிறது. திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

521—

அரசுத்துறை பள்ளிகளில் 6-ம் வகுப்பு முதல் ஆங்கிலப் பாட மொழியாக கொண்ட வகுப்புகள் நடத்தல்.

*9609—திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வித்துறையில், 6-ம் வகுப்பு முதல் ஆங்கிலம் பாட மொழியாக கொண்ட வகுப்புகள் நடத்த தனியார் பள்ளிகளுக்கு மட்டும் அரசு அனுமதி அளித்துள்ளதன் காரணம் என்ன ?

(ஆ) அரசுத்துறைப் பள்ளிகளிலும் 6-ம் வகுப்பு முதல் ஆங்கிலப் பாட மொழியாக கொண்ட வகுப்புகள் நடத்த அரசு அனுமதி வழங்குமா

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பல தனியார் பள்ளிகள் தங்கள் பள்ளிகளில் ஆங்கில வழிப்பிரிவுகள் துவக்க தொடர்ந்து கோரிக்கைகள் அனுப்பியதன் அடிப்படையில் அரசாணை எண். 705,கல்வித் துறை, நாள்: 25–5–1990-ன்படி நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு சில நிபந்தனைகளின் அடிப்படையில் 6-ஆம் வகுப்பில் ஆங்கில மொழிப்பிரிவுகள் துவக்க அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறு 1990-ம் கல்வி ஆண்டில் 251 உதவிபெறும் பள்ளிகளுக்கும், 1990–91-ம் கல்வி ஆண்டில் 108 உதவிபெறும் பள்ளிகளிலும் ஆறாம் வகுப்பில் ஆங்கில மொழிப்பிரிவு துவங்க அனுமதி வழங்கப்பட்டது.

(ஆ) அரசுத் துறைப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில் 60 மாநகராட்சிப் பள்ளிகள் மற்றும் 278 அரசுப் பள்ளிகளில் ஆங்கில மொழி வகுப்புகள் துவங்க 1990-ம் கல்வி ஆண்டில் னுமதி வழங்கப்பட்டுள்ளது.

1993 ஏப்ரல் 29]

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தனியார் பள்ளிகளில் மட்டும் ஆங்கில மொழி பாட மொழியாக இருப்பதாலும், பொருளாதார வசதி படைத்த நபர்கள் மட்டும் அந்த தனியார்துறை பள்ளிகளில் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். குறிப்பாக கிராமப்புறத்திலே ஏழை எளிய மக்களுடைய பிள்ளைகள் அரசுப் பள்ளிகளிலேயே பயில்கின்றனர். அந்த வகையில் பார்க்கும்போது, கிராமப்புற பள்ளிகளிலே படிக்கும் மாணவர்கள் 60 விழுக்காடுகள் பத்தாம் வகுப்பு தேர்வில் அவர்கள் தேர்வு பெறுவதில்லை. எனவே அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலத்தைப் பாட மொழியாக ஆக்குவதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக வரும் கல்வி ஆண்டிலேயே உத்திரவு வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி என்பது தாய் மொழி வழியில்தான் நடைபெறவேண்டும் என்பதுதான் ஒரு சரியான கல்விக் கொள்கை ஆகும். தேசிய கல்விக் கொள்கையிலும் அதையேதான் நாம் எடுத்துச்சொல்லி இருக்கிறோம். ஆக, ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய தாய் மொழியில் தான் கல்வி பெறவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையாகும். ஆனால் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்திலிருந்து ஆங்கில மொழியிலே கல்விப் பயிலுகின்ற அந்தப் பழக்கம் இருந்துவருகின்ற காரணத்தினாலேயும் அதிலே பொதுமக்களுக்கு சரியாகவோ, தவறாகவோ ஒரு ஆர்வம் இருக்கின்ற காரணத்தினாலேயும் ஆங்கில மொழி வழிக் கல்வி பயிலுகின்ற பாடப் பிரிவுகள், பள்ளிகள் இவைகள் எல்லாம் பார்த்த பக்கம் எல்லாம் நிறைய துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதிலே அரசைப் பொறுத்த வரையில் இந்தக் கொள்கையை வைத்திருக்கின்ற காரணத்தால்தான் அனுமதியை நாம் தராமல் இருந்து வந்தோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இப்போது சமீபத்தில், இடையிலே வந்தபோது அவர்கள் சில நிபந்தனைகளின் அடிப்படையில் தருவது என்று முடிவு எடுத்து தந்திருக்கிறார்கள். அதைத்தான் நான் இப்போது விடையாகச் சொன்னேன். ஆகவே, மேற்கொண்டு கேட்கிறார்கள் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியில் இருந்தும் தெரிகிறது. எங்களுக்கும் அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் பரிசீலித்துதான் அரசு முடிவு எடுக்க வேண்டும்.

[1993 ஏப்ரல் 29

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுப்பதிலே நம் அரசும் குறிப்பாக நானும் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இருந்தபோதிலும் வசதியில்லாத பிள்ளைகள் மட்டும் தேர்வு களில் வெற்றி பெறமுடியவில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். குறிப்பாக இந்த கிராமப்புறங்களில் இருக்கும் பிள்ளைகள், தமிழைப் படித்து விட்டு மேல் பட்டப் படிப்புப் படிக்கச் செல்வதற்காக அந்த 10 ஆம் வகுப்பிலேயே அவர்கள் தேர்வு பெறாமல் நின்று விடு கிறார்கள். ஆனால் வசதியுள்ள பிள்ளைகள் அவர்கள் தனி யார் பள்ளிகளில் படித்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பெரிய பதவிகளுக்கு எல்லாம் சென்று விடுகிறார்கள். எனவே, மீண்டும் மறுபரிசீலனை செய்து ஒன்று தமிழகத்தில் இருக்கும் அனைத்து பள்ளிகளுக்கும் 6 ஆம் வகுப்பில் ஆங்கிலப் பாட மொழியாக கொடுக்காதீர்கள். அல்லது எல்லாத் துறை, அரசுத் துறைப் பள்ளிகள் அனைத்திலும் ஆங்கிலத்தையும் பாட மொழியாக வையுங்கள் என்று மீண்டும் உங்களை நான் அன் போடு கேட்டுக்கொண்டு அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியைப் படிக்க வேண்டும் என்பதும், தமிழைப் படிக்கவேண்டும் என்பதும் நடைமுறையில் இருந்து வருகிற ஒன்றுதான். அந்த மொழியை நாம் படிக்கிறோம். அந்த மொழியில் இருக்கின்ற இலக்கியத்தைப் படிக்கிறோம். நம்முடைய தாய் மொழி என்ற அடிப்படையில் அந்த மொழியைக் கற்று வருகிறோம். மற்ற பாடங்களை எந்த மொழியில் படிக்கவேண்டும் என்பதும் அது எதற்காக என்கின்ற அந்தப் பிரச்சினையில் நாம் கவனம் செலுத்தி பார்க்கின்றபோது ஒரு குழந்தையினுடைய அறிவுத் திறன், செயல்படுகின்ற திறன் எல்லாம் தாய் மொழியிலே படிப்பதன் மூலமாகத் தான் சரியாக நடைபெறுகிறது என்பதை நாம் உலகம் முழுவதும் இருக்கின்ற அனுபவத்தை வைத்து பார்க்கிறோம். உலகத்திலே எந்த நாட்டிலேயும் தன்னுடைய தாய் மொழி அல்லாத ஒரு மொழியில் கல்வி பயிலுகின்ற நிலைமை கிடையாது. நம்முடைய இந்தியாவில் அதுவும் இதுபோன்ற நம்முடைய தமிழ்நாட்டில் அந்த மோகம் இருக்கிறது, இப்போது நாம் படித்துக் கொண் டிருக்கிறோம். கல்வியைப் பொறுத்தவரையில் முழுமையான அதிகாரம் அரசுக்குக் கிடையாது என்பதை பல்வேறு சந் தர்ப்பங்களில் இதே சட்டப்பேரவையிலே நாம் சொல்லி வருகிறோம். நான் குறிப்பிட விரும்புவது, மைனாரிட்டி பள்ளிகள் என்று வருகிறபோது அவர்கள் இஷ்டத்திற்குப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கலாம் என்று அரசியல் சட்டத்தில்

1993 ஏப்ரல் 29]

அந்த உரிமையை நாம் தந்திருக்கிறோம். ஆகவே, அவர்கள் அதை ஆரம்பித்து நடத்துகிறார்கள். இப்போது, ஆங்கிலத்தில் படித்தால், ஆங்கிலத்தில் பேசினால்தான் அறிவுக்கு அடை யாளம் என்கின்ற ஒரு தவறான அபிப்பிராயம் இருக்கின்ற காரணத்தால் தங்களுடைய குழந்தைகளை ஆங்கில வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று பெற்றோர்கள் விரும்புகிறார்கள். ஆகவே, பொதுமக்களுடைய கோரிக்கை என்று வருகிறபோது நாம் அதைத் தடுக்க முடியவில்லை. அந்தக் காரணத்தால்தான் இந்த ஆங்கில மொழியில் படிக்கின்ற பாடப் பிரிவுகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன. நாமும் அனுமதி தரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மற்றபடி தமிழில் படிப்பது தான் சரி. அதிலும் கிராமப்புறங்களில் இருக்கின்ற குழந்தைகள் தமிழ் மொழியில் படிப்பதுதான் சிறந்தது. உதாரணமாக ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், மேல்நிலைக் கல்வியானது பி.யூ.சி. என்ற பெயரில் ஆங்கில வழியில் சொல்லித் தற்போது கிராமப்புற மாணவர்கள் பெரும்பாலும் இன்ஜினியரிங் கல்லூரிகளுக்கு, மருத்துவ கல்லூரிகளுக்குப் போக முடியவில்லை. ஆனால், அதையேமேல்நிலைப் பள்ளியிலே கொண்டு வந்து வைத்து, தமிழ்மொழியிலே நாம் சொல்லித் தந்ததற்குப்பிறகு, இன்றைக்கு கிராமத்திலே நடைபெறுகின்ற மேல்நிலைப் பள்ளிகளிலே, அநேகமாக ஒருவனாவது பொறியியல் கல் லூரியிலேயோ அல்லது மற்ற கல்லூரியிலேயோ சேருகின்ற வாய்ப்பை இன்றைக்குப் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அது நமக்கு நிதர்சனமான ஒரு அடையாளமாக இருந்து கொண்டு இருக்கிறது.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி, எங்கே பார்த்தாலும் நர்சரி பள்ளிகள், ஆங்கிலப் பள்ளிகள் அதிக அளவிலே இருக்கின்றன. ஆனால் ஆறாம் வகுப்புக்குமேல் வருகின்றபொழுது, கிராமங் களிலே அங்கே ஆங்கிலப் பள்ளி இல்லாத காரணத்தினாலும், அந்த மாணவர்களுக்கெல்லாம் ஆங்கில போதனாமுறை மூலமாகக் கற்றுத்தர, அந்த வகுப்புகள் இல்லாத காரணத் தாலும் அதிக அளவிலே பல மாணவர்கள் சிரமப்படுகின் றார்கள். ஏனென்றால், அரசாங்கம் ஆறாம் வகுப்புக்கு மேல் கொடுத்திருக்கின்ற அந்த வகுப்புகளுக்கெல்லாம் ஆனுவல் கிராண்ட் இல்லையென்று சொல்லியிருக்கின்றார்கள், தனி யார் பள்ளிகளைப் பொறுத்த அளவிலே. எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து,

ஆனுவல் கிராண்ட் ஆங்கில மொழி போதனா முறையை சொல்லிக் கொடுக்கின்ற அந்த வகுப்புகளுக்கும் கொடுப்பதற்கு மறு பரிசீலனை செய்வார்களா? அரசு விரைவிலே அதிலே முடி வெடுத்து, இந்த ஆண்டே தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கொள்கைக்கு எதிராக ஆங்கில மொழியிலே படிக்க விரும்புகின்றவர்கள் கட்டணம் கொடுத்துத்தான் படிக்க வேண்டுமே தவிர, அவர்களுக்கு அரசு செலவு செய்யும் என்பது சரியான ஒரு கொள்கையாக ஆகாது. ஆகவே, அப்படிப்பட்டவர்கள் கட்டணத்தைக் கொடுத்துப் படிக்கலாம். அரசைப் பொறுத்தமட்டில், எது சரியான கொள்கையோ, அதற்குத்தான் நாம் செலவு செய்ய முடியுமே தவிர, ஒரு தவறான கொள்கைக்கு அரசு செலவு செய்வது என்பது, நாமே ஒன்றைத் தவறு என்று சொல்லிவிட்டு, நாமே ஒன்றைத் தவறு என்று எல்லா இடங்களிலும் பேசிக் கொண்டு, அதற்கு அரசாங்கம் பணம் செலவு செய்து கொண் டிருப்பது என்பது, அது சரியாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 522, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

522—

சங்க இலக்கிய நூல்கள்.

*16991—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சங்க இலக்கிய நூல்கள் மறுபதிப்பு செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றைப் பதிப்பிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்க இலக்கியங்கள் பல மதிப்புகளைக் கண் டுள்ளன. தனிப்பட்ட அமைப்புகளும், பல்கலைக் கழகங் களிலுள்ள பதிப்புத் துறைகளும், சங்க இலக்கியங்களையும், அவை தொடர்பான நூல்களையும் வெளியிட்டு வருகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகமும், சங்க இலக்கியங்களைப் பதிப் பித்துள்ளது. சங்க இலக்கியங்கள் எவருக்கும் கிடைக்கத்தக்க நிலையில் உள்ளன. சங்க இலக்கியங்கள் மறு பதிப்பு செய்யப் பெறா நிலை இல்லை.